PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2

TAMIL LANGUAGE PRIMARY 4 - 2013

PAPER 1 – COMPOSITION


| Your Score Out of 20 marks | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

Name : ____________________ Class: P4 ___ Index No: ____

TAMIL LANGUAGE Att:0hr 50min

COMPOSITION

கீழ்க்காணும் படத்தொடரைக் கொண்டு 70 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. படத்தொடரின் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களைக் கட்டுரை எழுதப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| இடைவேளை | சத்தம் |
| கூடைப்பந்து | ஆசிரியர் |
| மகிழ்ச்சியாக | கோபம் |
| தள்ளிவிட்டு | கண்டித்தார் |
| வலியால் | தலை குனிந்தான் |

# Primary School

## Semestral Assessment –

## Primary Four

# Tamil Language

# Paper 2

Time : 1hr. 30 minutes

INSTRUCTIONS TO CANDIDATES:

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.

Name: ______________________________

Class: ______________

Date:

Parent's Signature: __________________

Marks:-

வேற்றுமை உருபுகள்

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை OAS விடைத் தாளில் நிழலிடுக.
( மதிப்பெண்கள்)

அன்று பள்ளியில் இன நல்லிணக்க நாள். மாணவர்கள் அனைவரும் பாரம்பரிய 1) __________ அணிந்திருந்தனர். மாணவர்கள் இடைவேளையின் போது பிற 2) __________ பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடினர். அவர்கள் பல சுவையான உணவுகளை உண்டு மகிழ்ந்தனர். இடைவேளைக்குப் பிறகு மாணவர்கள் பள்ளி 3) __________ கூடினார்கள். மாணவர்கள் கலைநிகழ்ச்சியைக் கண்டு களித்தனர். அதில் இடம்பெற்ற புதிர்ப்போட்டியில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றார்கள். இறுதியாக மாணவர்கள் 4) __________ சென்று தங்களின் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டனர். அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர்.

1. (1) உடைகளின் (2) உடைகளுடன்
   (3) உடைகளை (4) உடைகளுக்கு

2. (1) இனத்தவரின் (2) இனத்தவருக்கு
   (3) இனத்தவரை (4) இனத்தவரால்

3. (1) மண்டபத்தின் (2) மண்டபத்திலிருந்து
   (3) மண்டபத்தை (4) மண்டபத்தில்

4. (1) வகுப்பிலிருந்து (2) வகுப்பை
   (3) வகுப்பில் (4) வகுப்புக்கு

செய்யுள் / பழமொழி

கீழ்க்காணும் செய்யுளை / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை OAS விடைத் தாளில் நிழலிடுக. (10 மதிப்பெண்கள்)

5. உண்டிக்கு அழகு ______________________ உண்டல்.

(1) நண்பரோடு
(2) விருந்தோடு
(3) குடும்பத்தோடு
(4) மருந்தோடு

6. ஐந்திலே வளையாதது ________________ வளையுமா?

(1) இருபதில்
(2) ஐந்தில்
(3) ஐம்பதில்
(4) அறுபதில்

7. ________________ கைவிடேல்

(1) ஊக்கமது
(2) உழைப்பது
(3) உண்ணுவது
(4) படிப்பது

8. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் ________________.

(1) புத்தி
(2) அறிவு
(3) படிப்பு
(4) கல்வி

9. ______________________ புத்தி மட்டு.

(1) அரசனுக்கு
(2) கோபகாரனுக்கு
(3) ஆத்திரக்காரனுக்கு
(4) அவசரக்காரனுக்கு

## தெரிவுவிடைக் கருத்தறிதல்

**கீழ்க்காணும் பகுதியைக் கவனமாகப் படி. நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகச் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை OAS விடைத் தாளில் நிழலிடுக. (10 மதிப்பெண்கள்)**

முகிலன் நண்பர்களுடன் பூங்காவில் விளையாடிவிட்டு வீட்டுக்குச் சென்றுக்கொண்டிருந்தான். அப்போது யாரோ முணங்கும் சத்தம் கேட்டது. அவன் சத்தம் வந்த இடத்தை நோக்கி விரைவாகவும் சற்று தயக்கத்துடனும் நடந்தான். அங்கே ஒரு மூதாட்டி மயக்க நிலையில் வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தார். அவருடைய காலில் ஏதோ காயம் இருந்தது. முகிலன் அவர் அருகில் சென்றபோது அவ்வழியாக ஒரு பாம்பு செல்வதைக் கண்டான்.

முகிலன் உடனே மூதாட்டியின் காயத்துக்கான காரணத்தைப் புரிந்துகொண்டான். அவன் பாம்பை அடிக்க ஒரு தடியைத் தேடினான். அதற்குள் பாம்பு புதர்களுக்கு இடையே சென்று மறைந்தது. முகிலன் உடனே தன் காலணிகளின் கயிற்றை கழற்றி மூதாட்டியின் காலில் கட்டினான். இது விஷம் ஏறுவதைத் தடுத்தது.

பிறகு பூங்காவில் இருந்தவர்களின் உதவியை நாடி மருத்துவமனைக்கு தகவல் கொடுத்தான். மூதாட்டிக்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவர்களின் உடனடி கவனிப்பால் மூதாட்டி உயிர் பிழைத்தார். மூதாட்டியின் உறவினர்கள் முகிலனுக்கு நன்றி கூறினார்கள்.

**பின்வரும் பகுதியைக் கவனமாக வாசி. பின்னர் கேள்விகளுக்கு விடை அளிக்கவும்.**

10. முகிலன் பூங்காவில் என்ன சத்தத்தைக் கேட்டான்?

(1) பாம்பின் சத்தத்தை
(2) யாரோ முணங்கும் சத்தத்தை
(3) மூதாட்டியின் அலறல் சத்தத்தை
(4) பாம்பை அடிக்கும் சத்தத்தை

11. மூதாட்டி ஏன் வலி தாங்க முடியாமல் துடித்துக்கொண்டிருந்தார்?

(1) பாம்பு கடித்ததால்
(2) கீழே விழுந்ததால்
(3) காலில் அடிப்பட்டதால்
(4) மயங்கி விழுந்ததால்

12. முகிலன் ஏன் மூதாட்டியின் காலில் கயிற்றைக் கட்டினான்?

(1) பாம்பு மீண்டும் கடிக்காமல் இருக்க
(2) மூதாட்டி பயப்படாமல் இருக்க
(3) மூதாட்டிக்கு வலிக்காமல் இருக்க
(4) காலில் விஷம் ஏறாமல் இருக்க

13. மூதாட்டியை மருத்துவமனையில் சேர்க்க யார் உதவியது?

(1) மூதாட்டியின் உறவினர்கள்
(2) பூங்காவில் இருந்தவர்கள்
(3) மருத்துவர்கள்
(4) முகிலனின் நண்பர்கள்

14. மூதாட்டி எப்படி உயிர் பிழைத்தார்?

(1) முகிலன் பாட்டிக்கு உதவியதால்
(2) காலில் கயிற்றைக் கட்டியதால்
(3) முகிலன் மருத்துவமனையில் சேர்த்ததால்
(4) மருத்துவர்களின் கவனிப்பால்

முன்னுணர்வுக் கருத்தறிதல் (5 மதிப்பெண்கள்)
கீழ்க்காணும் பகுதியில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையை அடியிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

கண்ணன் தன் நண்பர்களுடன் விளையாடிக்கொண்டு இருந்தான். அப்போது அவன் நண்பர்களில் ஒருவன் ஒரு பெரிய 15.(_____) விழுந்துவிட்டான். அந்த ஜாடியில் நிறைய தண்ணீர் இருந்தது. அதைக் கண்ட மற்ற 16.(_____) பயந்து ஓடினார்கள். கண்ணன் சிறுவனைக் காப்பாற்ற நினைத்தான். அவனுக்கு ஒரு 17.(_____) தோன்றியது. அவன் தரையில் கிடந்த கல் ஒன்றை எடுத்து ஜாடியை 18.(_____). ஜாடி உடைந்து தண்ணீர் எங்கும் சிதறி ஓடியது. ஜாடிக்குள் இருந்த சிறுவன் உயிர் 19.(_____). அப்போது, சிறுவனின் அப்பா அங்கு வந்தார். அவர் கண்ணனைப் பாராட்டினார். அவர் அவனுக்கு நன்றி கூறினார்.

| | |
|---|---|
| 1. உடைத்தான் | 2. செய்தான் |
| 3. ஞாபகம் | 4. பிழைத்தான் |
| 5. யோசனை | 6. இறந்தான் |
| 7. ஜாடிக்குள் | 8. சிறுவர்கள் |

ஒலி வேறுபாடு

<u>கீழ்க்காணும் வாக்கியங்களை நிரப்புவதற்கு ஏற்ற சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.</u>

20. மதிவாணனின் ____________________ பை கனமாக இருக்கிறது.

( பல்லி , பள்ளி )

21. மூர்த்தி எல்லோருக்கும் உதவி செய்யும் நல்ல ____________________ உள்ளவர்.

( மனம் , மணம் )

22. நாய் ____________________ கேட்ட எனக்கு விழிப்பு வந்தது .

( குரைத்ததை , குறைத்ததை )

23. இந்த உணவகத்தின் நண்டு ____________________ பலரைக் கவர்ந்து இருக்கிறது..

( கரி , கறி )

24. கைகளைக் கழுவிய பிறகு உணவை ____________________ .

( உன் , உண் )

25. என் தாத்தா ____________________ .நேரத்தில் உடற்பயிற்சி செய்வார்.

( காலை , காளை )

26. திருடர்கள் வங்கியில் ____________________ அடித்தனர்.


( கொல்லை , கொள்ளை )

<u>கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (6 மதிப்பெண்கள்)</u>

பகுதியைக் கவனமாகப் படித்துவிட்டுக் கேள்விகளுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.


அறுசுவை உணவுக்கு
ராதா உணவு மாளிகை

19- A போத்தோங் பாசிர் சாலை
தொலைபேசி எண் : 64809914
நேரடித் தொடர்புக்கு : 97888501




ராதா உணவு மாளிகையின் திறப்பு விழாவை முன்னிட்டு:

- முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு 50% தள்ளுபடி தரப்படும். (ஜூலை 20 முதல் ஜூலை 22 வரை)



தேசிய தினத்தை முன்னிட்டு
(ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 31 வரை)
குடும்பத்துடன் வருபவர்களுக்கு மேலும் கழிவு வழங்கப்படும். ஒரு குடும்ப உறுப்பினருக்கு 2 வெள்ளி கழிவு தரப்படும்.



- வீட்டிற்கு அனுப்பி வைக்கும் சேவையும் உண்டு.
- எங்கள் கடை தினமும் 9 முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்.

27. முதல் 50 வாடிக்கையாளர்களுக்கு ஏன் பாதிக்கட்டணத்தில் உணவு வழங்கப்படுகிறது?

1. தேசிய தினத்தை முன்னிட்டு

2. உணவகத் திறப்பு விழாவை முன்னிட்டு

3. வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்காக ( )

28. ஆகஸ்ட் மாதத்தில் நான்கு பேர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு எவ்வளவு கழிவு தரப்படும்?

1. ஆறு வெள்ளி கழிவு தரப்படும்

2. பத்து வெள்ளி கழிவு தரப்படும்

3. எட்டு வெள்ளி கழிவு தரப்படும் ( )

29. ராதா உணவகத்திற்குக் காலை எட்டு மணிக்குச் சென்றால் சாப்பிட முடியாது. ஏன்?

1. உணவகம் மூடியிருக்கும்

2. உணவகத்தில் உணவு இருக்காது

3. உணவகத்தில் பணியாளர்கள் இருக்கமாட்டார்கள் ( )

## சுயவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு விடை எழுது.

ஒரு வணிகன் வியாபாரம் செய்வதற்காகப் பக்கத்து ஊருக்குப் புறப்பட்டான். தனக்குத் துணையாகத் தன் வேலைக்காரனையும் அழைத்துச் சென்றான்.

இருவரும் ஒரு காட்டு வழியே நடந்து சென்றனர். அப்போது இருட்டிவிட்டது. அதனால் வணிகன் தன்னிடம் இருந்த பணத்தையெல்லாம் தன் வேலைக்காரனிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, ஒரு மரத்தின் அடியில் படுத்துத் தூங்கினான். சற்று நேரம் கழித்து வேலைக்காரனும் வழியின் குறுக்கே படுத்துத் தூங்கிவிட்டான்.

அச்சமயம் கள்வர்கள் சிலர் அந்த வழியாக வந்தனர். இருட்டாக இருந்ததால் அவர்களில் ஒருவன் வேலைக்காரனின் காலில் இடித்துவிட்டான். அவன், "நான் மரக்கட்டை ஒன்றில் இடித்துவிட்டேன்," என்றான். அதைக் கேட்டு கோபம் அடைந்த வேலைக்காரன், "நானா மரக்கட்டை? மரக்கட்டையிடம் பணம் இருக்குமா?" என்று கூறித் தன்னிடமிருந்த பணத்தையெல்லாம் அள்ளி நீட்டினான். கள்வர்கள் உடனே எல்லா பணத்தையும் பறித்துக்கொண்டு ஓடி விட்டனர்.

30. வணிகன் பக்கத்து ஊருக்குச் செல்லக் காரணம் என்ன?

______________________________________

______________________________________

______________________________________

31. இருவரும் ஏன் காட்டில் தூங்கினர்?

32. கள்வன் எதை மரக்கட்டை என்று நினைத்துக் கொண்டான்?

33. வேலைக்காரன் என்ன செய்திருந்தால் கள்வன் அவனை மிதிக்காமல் இருந்திருப்பான்?

34. வேலைக்காரன் எப்படிப்பட்டவன்?

முற்றும்

சொற்பொருள் (4 மதிப்பெண்கள்)

34 முதல் 37 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம் பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது.

35. வணிகன் - 1. பணக்காரன் 2. வெளிநாட்டவன்
3. வியாபாரி 4. ஏழை ( )

36. துணையாக - 1. அலங்காரமாக 2. உபத்திரவமாக
3. பதிலாக 4. உதவியாக ( )

37. பத்திரமாக - 1. பாதுகாப்பாக 2. மறைவாக
3. அமைதியாக 4. உயரமாக ( )

38. கள்வர்கள் - 1. உறவினர்கள் 2. வேலையாட்கள்
3. நண்பர்கள் 4. திருடர்கள் ( )

P4

# TESTPAPER 4

விடைகள்

1. 3   2. 1   3. 4   4. 4

5. 2   6. 3   7. 1   8. 4   9. 3

10. 2   11. 1   12. 4   13. 2   14. 4

15. 7   16. 8   17. 5   18. 1   19. 4

20. பள்ளி   21. மனம்   22. குரைத்ததை   23. குறி

24. உண்   25. காலை   26. கொள்ளை

27. 2   28. 3   29. 1

30. வணிகன் வியாபாரம் செய்வதற்காகப் பக்கத்து ஊருக்குச் சென்றான்.

31. பக்கத்து ஊரை அடைவதற்கு முன் இருட்டிவிட்டதால் இருவரும் காட்டில் தூங்கினர்.

32. கள்வன் வேலைக்காரனின் காலை மரக்கட்டை என்று நினைத்துக் கொண்டான்.

33. வேலைக்காரன் வழியின் குறுக்கே படுக்காமல் இருந்திருந்திருந்தால் கள்வன் அவனை மிதிக்காமல் இருந்திருப்பான்.

34. வேலைக்காரன் அறிவில்லாதவன் / ஒரு முட்டாள்.

35. 3   36. 4   37. 1   38. 4